1991 செப்டம்பர் 30]

திருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய என்னைக் கனவுகள் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை மதிப்பீடுகள் 1991-92, மொழிதல். (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1991-92 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கையை பேரவையில் அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1991 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் செவ்வாய்க் கிழமையைக் குறித்துள்ளார்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) நாங்குநேரி தொகுதியில் உள்ள விஜயநாராயணபுர ஏரியின் மடைகள் சேதமடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாங்குநேரி தொகுதியில் விஜயநாராயணபுர ஏரி என்று ஒரு ஏரி உள்ளது. அந்தப் பெரிய ஏரி மிகவும் சேதம் அடைந்திருக்கிறது.

[1991 செப்டம்பர் 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நடேசன் பால்ராஜ், நீங்கள் கொடுத்திருக்கும் கவன ஈர்ப்பைப் படித்தால் போதும்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாங்குனேரி தொகுதியில் உள்ள விஜயநாராயணபுர ஏரியின் மடைகள் சேதமடைந்துள்ளது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

விவர அறிக்கை.

விஜயநாராயணபுரம் ஏரியானது திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு கால்வாயில் 4 வது ரீச்சில் உள்ள ஒரு பெரிய ஏரியாகும். இதற்கு மணிமுத்தாறு பாசன வசதி கிடைத்து வருகிறது.

இந்த ஏரியின் கொள்ளளவு 310 மில்லியன் கனஅடி ஆகும். கடந்த பல ஆண்டுகளாக வண்டல் மண் ஏரியில் உள்வாயில் படிந்து கொள்ளளவு சுமார் 25 சதவீதம் குறைந்துள்ளது. ஏரியின் மடைகள் பழுதடைந்தும், ஏரிக்கரையும் ஆங்காங்கே சேதமடைந்தும் உள்ளது. ஏரிக்கரைக்கு அலைகற்கள் [illegible] பதிக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

பாசன ஆதாரங்களை மராமத்துச் செய்ய ஒதுக்கப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லாததால் இந்த ஏரியின் மொத்த பழுதுகளையும் செப்பனிட இயலாமல் உள்ளது. ஏரியில் உள்வாயில்

1991 செப்டம்பர் 30] [திரு. எஸ். கண்ணப்பன்]

படிந்துள்ள வண்டல் மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்தினால் தான் ஏரியின் கொள்ளளவை முன்பு இருந்த அளவுக்குக் கொண்டு வரமுடியும். இதற்காக கனரக இயந்திரங்களை கொண்டு பெரிய அளவில் செலவு செய்ய வேண்டி இருக்கும்.

இந்த ஆண்டு மராமத்துப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஏரியின் மதகுகளை மட்டும் பழுதுபார்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கரையை மராமத்து செய்தல் பணிக்கு வரும் ஆண்டுகளில் ஒதுக்கப்படுகின்ற நிதி அடிப்படையில் படிப்படியாக பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: இந்த ஏரி மிகவும் சேதம் அடைந்திருக்கிறது. 100, 200 கிராமங்களை அழிந்துவிட ஏங்கி தவித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு 'மெயின்டெனன்ஸ் எக்ஸ்பென்சஸ்' என்று ஆரம்பிப்பதைவிட ஒரு நல்ல 'எஸ்டிமேட்' போட்டு குறிப்பிட்ட காலத்திலே அதைச் செய்வார்களேயானால் அங்குள்ள மக்களை நீங்கள் பாதுகாக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விஜயநாராயணபுர ஏரியானது, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் மணிமுத்தாறு கால்வாயில் நான்காவது ரீச்சில் அமைந்திருக்கிறது. மணிமுத்தாறு பாசனம் இந்த ஏரிக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஏரியை இந்த ஆண்டு செப்பனிடுவதற்காக ஒதுக்கப்படுகிற நிதியிலிருந்து, இந்த ஏரியின் மதகுகளை பழுது பார்ப்பதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த ஏரியினுடைய நிலைமையைப் பற்றி பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு அதை ஆழப்படுத்துவதற்கு எந்த அளவிற்கு மதிப்பீடு தயார் செய்ய வேண்டும் என்பது குறித்து ஒரு ஒப்புதல் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு மதகுகளை சரி செய்து கொடுத்துவிட்டு, அடுத்த நிதியாண்டில் இருக்கின்ற

ஆதாரங்களை வைத்து உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அந்த ஏரியை மேம்படுத்த ஏற்பாடு செய்யப்படும், அந்த ஏரியினுடைய கொள்ளளவை மேம்படுத்த ஏற்பாடு செய்யப் படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியை பராமரிப்புச் செய்யும்படி ஆணையிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(ஆ) சங்கராபுரம் தொகுதி கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றி யுள்ள கிராமங்களில் மின் விளக்குகள் எரியாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. இராம சுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இராமசுவாமி.

* திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, கல்ராயன் மலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் மின்விளக்குகள் எரியாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி கல்ராயன் மலைப் பகுதியில் வெள்ளிமலை, கரியாலூர், சேராப்பட்டு, இந்நாடு மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் 850 தெரு குழல் விளக்குகள் ஒருங் கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் எரியாமல் இருந்தன. 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 600 மூழ்குத் குழல் விளக்குகள் வாங்கிப் பொருத்தி அவைகள் எரியச் செய்யப்